# தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச்செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தூத்துக்குடி, செப்.7-
தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் 09.09.2026 புதன் கிழமை மாலை 4 மணிக்கு, மாவட்டக் கழக அலுவலகத்தில்எனது தலைமையில் நடைபெறவுள்ளது.

நடைபெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் என். நல்லசேதுபதி, மாநில மாணவரணி துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக மாநில,மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

கழக நிர்வாக சீரமைப்பு

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகே விருப்பாட்சியில் உள்ள விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கரின் 225வது நினைவு நாளை முன்னிட்டு, திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் அர.சக்கரபாணி. எம்.எல்.ஏ. கோபால்நாயக்கரின் திருவுருச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் எஸ்.டி.சாமிநாதன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.



சுதந்திரப் போராட்ட வீரரும், சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கி ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடியவருமான கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் புகழை போற்றும் விதமாக பரமக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவரது திருவுருவ சிலைக்கு இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கதிரவன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.வி.ஆர். ராம்பிரபு உட்பட கழக மாவட்டத் துணைச் செயலாளர் கே கருப்பையா மாநில மாவட்ட ஒன்றிய நகர கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. சிதம்பரனார் அவர்களின் 155 வது பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சுதந்திரப் போராட்ட தியாகி வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.உடன் கழக நிர்வாகிகள் திவான் ஒலி,சீனித்துரை, இஞ்சி இஸ்மாயில்,முத்துக்குமார் மஹ்முதா,சுப்பிரமணியன்,சூர்யா மணி என்ற ஈஸ்வரன்,இசக்கிதுரை ரகுமான் சாதத்,சண்முகமணிகண்டன், மைதீன்,சபரி சங்கர் ஆகியோர் உள்ளனர்.




கழக மறுசீரமைப்பு தொடர்பான நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அரங்கில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் தலைமை கழக பிரதிநிதிகள் முத்துராஜா எம்.எல்.ஏ.மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.மாவட்ட துணைச் செயலாளர் தமயந்தி வரவேற்புரையாற்றினார்.உடன் மேயர்.கோ. ராமகிருஷ்ணன்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், கே.கே.சி.பிரபாகரன்,மாநில நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கணேஷ் குமார் ஆதித்தன்,மாவட்ட துணைச் செயலாளர் மைக்கேல் உள்பட ஒன்றிய,நகர,பேரூர்,கிளை கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதி உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



கழக மறு சீரமைப்பு தொடர்பான தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.செயற்குழுக் கூட்டம் தென்காசி சிவா திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் சுந்தரமகாலிங்கம் தலைமையில் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் முன்னாள் எம்.பி. சா.ஞான திரவியம்,வ.து.ந.ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் உரையாற்றினார். உடன் தென்காசி மரு. ராணி ஸ்ரீகுமார் எம்.பி,சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.கலை கதிரவன், (தென்காசி) தி.மு.இராசேந்திரன் (கடையநல்லூர்) முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன்,கழக நிர்வாகிகள் மா.செல்லதுரை, முத்துப்பாண்டி,ஷேக் தாவுது,ஷெரிப், ஆறுமுகசாமி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




விளாத்திகுளம் ஸ்ரீ அம்பாள் வித்தியாலயா பள்ளி 13ம் ஆண்டு விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டு கடந்த கல்வியாண்டில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவிகளுக்கு ஊக்கத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். விழாவில் சாகித்யா அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் தமிழ்ச்செல்வன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள். மேலும் நிகழ்வில் பள்ளி கல்வி குழும தலைவர் வீமராஜ் பள்ளி செயலர் சுப்பா ரெட்டியார் பள்ளி நிர்வாக அதிகாரி கணேசன் பள்ளி முதல்வர் அமராவதி உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 155வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் சிம்மக்கல்லில் அமைந்துள்ள அன்னாரது திருஉருவச் சிலைக்கு மாவட்ட செயலாளர் கோ.தளபதி மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கோபாலகிருஷ்ணன், மாவட்ட அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் பி.டி.மணிமாறன், வைகை பரமன், முத்து கணேசன், செய்யது அபுதாஹிர், குரும்பன், காவேரி சொக்கலிங்கம், ராஜேந்திரன், லேத் சிவா, திராவிட மாரி, ராஜேஷ் என்ற பாக்கியராஜ் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.



கப்பலோட்டிய தமிழன் வ.உ சிதம்பரனார் அவர்களின் 155 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் நெல்லை பாளையங்கோட்டை வ.உ.சி. விளையாட்டு அரங்கத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருஉருவச் சிலைக்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் முருகன், ஏ.எல்.எஸ். லெட்சுமணன்,பேச்சிபாண்டியன், சுரேஷ்,தர்மன், ராஜு, விஜிலா சத்யானந்த் ஆகியோர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




கழக மறுசீரமைப்பு தொடர்பான நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.செயற்குழுக் கூட்டம் பாளை பி.பி.எல்.மகாலில் மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமைக் கழக பிரதிநிதி புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா பங்கேற்று உரையாற்றினார்.உடன் தலைமைக் கழகப் பிரதிநிதி மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல், மாவட்ட அவைத் தலைவர் முருகன், மாநகர மேற்குப் பொறுப்பாளர்சு.சுப்பிரமணியன், தீர்மானக்குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா,தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன்,மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சக்தியானந்த் மாவட்ட துணைச் செயலாளர்கள் தர்மன்,சுரேஷ்,கிரிஜா குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உளளனர்.




கழக மறுசீரமைப்பு தொடர்பான நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் வள்ளியூர் எம்.எஸ்.மஹாலில் மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் தலைமை கழக பிரதிநிதிகள் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜோயல், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.உடன் சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு,கழக நிர்வாகிகள் ஞான திரவியம்,சித்திக்,ஜார்ஜ் கோசல், செல்வ கருணாநிதி,சுடலைக்கண்ணு ஆரோக்கிய எட்வின்,ஜோசப் பெல்சி, சேதுராமலிங்கம் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.